தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 8-11-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் 22 வது மாவட்ட அளவிலான வினாடிவினா போட்டி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், சமுதாய நற்பணிமன்றம் சார்பாக 22 வது மாவட்ட அளவிலான வினாடிவினா போட்டி, பொன்விழா அரங்கில் 2-11-2014 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெற்றது. இந்த போட்டியில் 47 பள்ளிகளைச் சேர்ந்த 132 குழுக்கள் கலந்துகொண்டனர்.

முதல் சுற்றானது 6-8th, 9-10th, 1 1-12th என மூன்று பிரிவுகளாக நடைபெற்றது. இச்சுற்றிலிருந்து தகுதியான ஆறு குழுக்களைத் தேர்ந்தெடுத்து காட்சிசுற்று நடத்தப்பட்டது. மூன்று பிரிவுகளிலும் தமிழ், ஆங்கிலம் எனத் தனித்தனியாக நடத்தப்பட்டது.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முனைவர். எம். மகேஸ்வரன், இயக்குநர் ஆராய்ச்சி அவர்கள் பரிசு வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில் முனைவர். சி. திவாகர் துரைராஜ், முதன்மையர் (பொறியியல்) மற்றும் முனைவர். எம்.ஆர். சீனிவாசன், விடுதிக்காப்பாளர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

மக்கள் தொடர்பு அலுவலர்